**இலங்கை தேயிலைச் சபை - 2010**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை தேயிலைச் சபை 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தேயிலைச் சபையின் நிலைவரம் மற்றும் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பனவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசோட்டக்கூற்று, இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் படி முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. காசோட்டக் கூற்றுக்களில் உள்ள சில தொகைகளை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் மீளாய்வாண்டிற்கான தொழிற்பாட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட தொகைகளுடன் இணக்கம் செய்ய முடியாதிருந்தது.

(ஆ) பின்வரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகளில் புறம்பாக காட்டப்படுவதற்குப் பதிலாக ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டிருந்தன.

(i) ரூபா 746,760 தொகையாக இருந்த ஐக்கிய அரபு ராச்சியம் தொடர்பான காசு மற்றும் வங்கி மீதிகளிலுள்ள செலவு மீதி

(ii) ரூபா 54,534 தொகையான “வற்” கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்த வரவு மீதி

(iii) 2008 யூன் 25 இலிருந்து 2009 நொவம்பர் 03 வரை வாகனத்துடன் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த சாரதியின் சம்பளங்கள் மற்றும் திருத்தங்களிற்காக சபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 648,302 ஆன தொகை கிடைக்க வேண்டியனவாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 1.2.2 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக கிடைக்க வேண்டியவையாகக் காட்டப்பட்ட ரூபா 25,000,000 ஆன தொகை மீளாய்வு ஆண்டு இறுதிவரையிற் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், அறவீடு ஐயத்திற்கிடமானதாக இருப்பதால் நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்கான ஒரு நிதி ஏற்பாடு அதே தொகைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) களுபோவிற்றியான வெட்டுதல், கிழித்தல் மற்றும் சுருளாக்கும் (சீரீசீ) தேயிலை தொழிற்சாலையின் உற்பத்திக்காக தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதற்கான கடனாகக் கொடுக்கப்பட்டதும் 15 ஆண்டுகளிற்கு மேலாக எதுவித வட்டியும் சீரீசீ தேயிலைச் தொழிற்சாலையிலிருந்து அறவிடப்படாமலும் ரூபா 22,465,416 ஆன தொகை கிடைக்க வேண்டியதாக இருந்தது. எனினும் இந்தக் கடனை தீர்ப்பதற்கு இரு தரப்பினர்களுக்கிடையில் உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1995 இல் தேயிலை சபையால் வழங்கப்பட்ட உதவிப் பணத்திற்கான நிபந்தனைகளை தொழிற்சாலை நிறைவேற்றாதமையால் பொல்கென தேயிலைத் தொழிற்சாலையிடமிருந்து ரூபா 4,329,769 ஆன தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) கொழும்பு தேயிலை ஏலத்தின் நிபந்தனையான வாங்குவோர் விற்பனைத் திகதியைத் தொடர்ந்து வரும் 7 நாட்களிற்குள் கொள்வனவுக்கான முழுத்தொகையையும் தீர்க்க வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் உள்நாட்டுத் தேயிலைக் கைத்தொழிலின் பாதகமான சந்தை நிலைவரம் காரணமாக 2008 ஒக்தோபர் 28 இல் கொழும்பு தேயிலை ஏல விற்பனையிலிருந்து ரூபா 231,428,831 மொத்த பெறுமதியான 916,995 கிலோ கிராம் தேயிலையை சபை கொள்வனவு செய்திருந்தது. எனினும், 2011 யூன் 30 கணக்காய்வுத் திகதி வரை ரூபா 1,126,520 ஆன தொகை நிலுவையாக இருந்ததுடன் பெற வேண்டிய அந்தத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மின்சாரம், வாடகை, எரிபொருள், தபால், எரிவாயு முதலியவை தொடர்பான ரூபா 211,100 மொத்தத் தொகையான வைப்புக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அறவிடப்படாமல் நீண்ட காலமாக கணக்குகளில் இருந்தன.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம்.** | |
| பிரிவு 132 | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பான உ.பொ.செ.வரி ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்க்கு அனுப்பபட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிதிப்பிரமாணங்கள் | |
| - இல. 104(2) | மீளாய்வாண்டில் எட்டு வாகன விபத்துக்கள் ஏற்பட்டிருந்தவுடன் அந்த வாகனங்களின் திருத்தத்திற்காக ரூபா 281,107 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், பிரமாணத்தின்படி அந்த விபத்துக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| - இல 757 (2) | பிரமாணத்தின் படி மீளாய்வாண்டிற்கான பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகளில், பதிவேட்டு மீதிகள், மேலதிகங்கள் அல்லது நட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபம்.** | |
| - பந்தி 6.5.1 | வரைபு ஆண்டறிக்கை 2011 யூன் 30 வரையிற் கூட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

- பந்தி 5.2.1 வேண்டப்பட்டவாறு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஐந்தொகை, வருமானம் மற்றும் செலவினக் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று என்பவற்றை சபை தயாரித்திருக்கவில்லை.

- பந்தி 5.1.2 திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் எய்தப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுடன் முகாமையாளர்களின் பொறுப்புக்கள் தெளிவாக இணங்கானக் கூடிய ஒரு செயல் நடவடிக்கைத்திட்டம் மற்றும் கூட்டுத்திட்டத்திற்கான செயலாற்றல் சுட்டிகள் என்பவற்றை சபை தயாரிக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயலாற்றல் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் விளைவித்திருந்த ரூபா 29,786,206 ஆன தேறிய பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 86,669,272 ஆன நேரொத்த தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். அது நிதிசார் விளைவுகளில் ரூபா 56,883,066 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுச் செலவினங்களின் குறைவு இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.1.1 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செஸ்வரி வருமானம் ரூபா 62,400,000 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) வியாபாரிகளின் உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள், உற்பத்தித் தரங்களிற்கான உத்தரவுப் பதிவுக் கட்டணங்கள், தேயிலை ஏற்றுமதிகளின் புதுப்பித்தல் கட்டணங்கள், தேயிலை இறக்குமதிக்கான உத்தரவுப் பத்திர வழங்கல். தொழிற் சாலை பதிவுக் கட்டணங்கள் மற்றும் பகுப்பாய்வுக் கட்டணங்கள் என்பவற்றின் வீதங்களின் அதிகரிப்புக் காரணமாக, ஏனைய வருமானம் ரூபா 33,308,328 ஆல் அதிகரித்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆளுக்குரிய வேதனங்கள் ரூபா 21,123,333 ஆல் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் இறுதி அளவில் போலந்து கிளை மூடப்பட்டமை இதற்கான பிரதான காரணமாகும்.

### 2.1.2 செஸ் வரி சேகரிப்பு

(அ) தேயிலைத் துறையில் பொறுப்பேற்கப்படும் ஆராய்ச்சி, நிதி ஒழுங்குபடுத்தல்கள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றுக்கு நிதியளிக்கும் நோக்கில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சகல தேயிலைகளிலும், செஸ்வரி விதிக்கப்படுகிறது. ஒரு கிலோகிராமிற்கு ரூபா 2.00 ஆக நிர்ணயிக்கப்பட்ட செஸ் வரி 1997 ஏப்பிரலில் இருந்து அமுலாகுமாறு ரூபா 2.50 ஆக அதிகரிக்கப்பட்டது. 2006 ஏப்பிரல் 18 இலிருந்து அமுலாகுமாறு செஸ்வரி ஒரு கிலோகிராமிற்கு ரூபா 4.00 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் கௌரவ பெருந்தோட்டத்துறை அமைச்சரின் அனுமதியுடன் 2006 ஏப்பிரல் 17 ஆம் திகதிய 1441/03 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. செஸ் நிதியம் தொடர்பான ஒரே ஒரு சட்டமான 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கிய வகையில் செஸ் நிதியத்தின் தாபிப்பு மற்றும் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் இலங்கை சுங்கத்தால் சேகரிக்கப்பட்ட மொத்த செஸ் வரியின் 16 சதவீதம் ஒழுங்குபடுத்தல், மேம்பாட்டு மற்றும் ஏனைய ஆதரவு நடவடிக்கைகள் என்பவற்றின் செயற்பாட்டிற்காக திறைசேரியிடமிருந்து இலங்கை தேயிலைச் சபைக்கு ரூபா 192.0 மில்லியன் தொகை கிடைத்திருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காகக் கிடைத்த செஸ் வரி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 62.4 மில்லியன் அல்லது 24.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2 இணங்கானப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வில் பின்வரும் நட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 20 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளிருந்த வைப்புக்களில் ரூபா 40,340 தொகையான பிணைவைப்புக்கள் இலாபத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து ஊழியர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 219,814 தொகையான பதவியினர் கடன்கள், மரணம், பதவியை விட்டு விலகியமை போன்றவற்றால் இலாபத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

### 2.3 செயலாற்றல் மீளாய்வு

### 2.3.1 சபையின் செயற்பாடுகள்

இலங்கையின் தேயிலைத் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் இலங்கைத் ''தேயிலை'' இன் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல், தேயிலையின் சந்தை ஆராய்ச்சி தேயிலைத் துறைக்கு சந்தை விவேகத்தை வழங்குதல். தேயிலை ஆணையாளர் பிரிவு தேயிலை ஏற்றுமதிப்பிரிவு, தேயிலை மேம்பாட்டுப் பிரிவு, பகுப்பாய்வு ஆய்வு கூடம் மற்றும் தேயிலையை பரிட்ச்சிக்கும் அலகு என்பவற்றினூடாக தேயிலை வர்த்தகத்திற்கு ஆய்வு கூட மற்றும் தொழில்நுட்ப சேவை வழங்கல் என்பன சபையின் பிரதான பணிகளாகும். மீளாய்வாண்டிற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் படி, அவற்றில் சில நடவடிக்கைகளின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| செயற்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் சதவீதமாக | |
|---|---|---|
| | நிதிசார் முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
| | % | % |
| தேயிலை தொழிற்சாலைகளில் தரமுறைமைகளை நிறுவுதல் | 80 | 10 |
| தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் மீள் பயிரிடலுக்கான உதவித் திட்டம் | 98 | 21 |
| சர்வதேச வர்த்தக சந்தைகள் | 33 | 16 |
| யூனி தேசிய மேம்படுத்தல் | 35 | 8 |
| உள்நாட்டு மேம்பாடு | 43 | 12 |
| கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 100 | 6 |
| பொறித் தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 47 | 5 |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 50 | 12 |

மேற்படி தகவல்களின்படி, நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

### 2.3.2 இலங்கையில் தேயிலை உற்பத்தி

சபையால் தரப்பட்ட புள்ளி விபரங்களின்படி, 2008 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளிற்கான தேயிலை உற்பத்தியின் வகைப்படுத்தல்கள் கீழே தரப்படுகின்றன.

| வளர்ச்சி | தேயிலை உற்பத்தி (மெற்றிக் தொன்கள்) | | | 2008 உடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு / (குறைவின்) சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2010 | 2009 | 2008 | |
| உயர் வளர்ச்சி | 78,388 | 72,480 | 83,662 | (6.3) |
| நடுத்தர வளர்ச்சி | 54,060 | 43,313 | 47,024 | 14.9 |
| குறை வளர்ச்சி | 195,668 | 173,033 | 184,691 | 5.9 |
| | 328,116 | 288,826 | 315,377 | 4.0 |
| தேயிலைக் கொழுந்து உற்பத்தி | 3,310 | 2,305 | 3,039 | 8.0 |
| மொத்த தேயிலை உற்பத்தி | 331,426 | 291,131 | 318,416 | 4.0 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தேயிலை உற்பத்தி 40,295 மெற்றிக் தொன்கள் அல்லது 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3.3 இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி

கணக்காய்விற்குத் தரப்பட்ட புள்ளிவிபரங்களின் படி, 2008 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளில் இலங்கையிலிருந்தான ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வகை | தேயிலை ஏற்றுமதி (மில்லியன் கிலோ கிராமில்) | | | 2008 உடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு / (குறைவு) இன் சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2010 | 2009 | 2008 | % |
| மொத்த தேயிலை | 161.1 | 164.5 | 178.0 | (9.5) |
| தேயிலை பைக்கற்றுக்கள் | 82.0 | 75.5 | 84.3 | (2.6) |
| தேயிலை பைகள் | 23.1 | 18.7 | 20.3 | 13.8 |
| உடன் தேனீர் | 1.3 | 1.4 | 1.3 | - |
| பச்சைத் | 5.0 | 3.9 | 3.9 | 28.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| தேயிலை | | | | |
| ஏனைய தேயிலை | 26.0 | 15.9 | 13.4 | 94.0 |
| | ------------------- | ----------------- | -------------- | --------------- |
| மொத்தம் | 298.5 | 279.9 | 301.2 | (0.9) |
| | ========= | ======== | ======= | ======== |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையில் அளவு 18.6 மில்லியன் கிலோ கிராம்களால் அல்லது 7.0 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மொத்த தேயிலையின் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தது . 2008 உடன் ஒப்பிடப்படும் போது மீளாய்வாண்டிற்கான ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 0.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.3.4 தேயிலை ஆராய்ச்சிகள் அபிவிருத்திகள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்

நிதிக் கூற்றுக்களின் படி, 2008 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளிற்காக தேயிலை அபிவிருத்தி நடவடிக்கைகள், மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றிற்காக சபையால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | அபிவிருத்தி நடவடிக்கைகள் | மேம்பாட்டு நடவடிக்கைகள் | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2008 | 3,644,246 | 109,358,718 | 1,829,950 | 114,832,814 |
| 2009 | 24,552,506 | 102,286,182 | 2,003,148 | 128,841,836 |
| 2010 | 10,394,094 | 58,843,391 | 2,551,662 | 71,789,147 |
| | ----------------- | -------------------- | ----------------------- | ------------------ |
| | 38,590,846 | 270,488,291 | 6,384,660 | 315,463,797 |
| | ========= | ========= | ======= | ======== |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அபிவிருத்தி நடவடிக்கைகள், தேயிலை ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 57,052,689 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) தொழிற்சாலை நவீனப்படுத்தல் உதவிப்பணத்திற்காக விண்ணப்பிக்கப்பட்ட 244 தொழிற்சாலைகளில் மீளாய்வாண்டில் 13 தொழிற்சாலைகளிற்கு

மட்டுமே ரூபா 8,820,997 தொகையான உதவிப்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

உதவிப் பணத்திட்டத்தின் நிபந்தனைகளை மீறிய மற்றும் சபையின் முன் அனுமதியின்றி 2009 இல் இயந்திரங்களை நிறுவிய ஒரு தொழிற்சாலைக்கு ரூபா 1,000,000 மொத்தமான உதவிப் பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், தொழிற்சாலையானது 2011 யூன் 30 வரை ரூபா 1,000,000 ஆன உதவிப் பணத்தில் ரூபா 750,000 ஐ திரும்பக் கொடுத்திருந்தது.

(இ) சர்வதேச வர்த்தக சந்தை செலவினம் மற்றும் யூனி தேசிய மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 40,384,109 ஆல் குறைவடைந்திருந்தது.

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட ஆளணிக் கிரயம் தொடர்பான அறிக்கைகளின்படி 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ஊழியர் கோப்பு நிலைமை கீழே தரப்படுகின்றன.

| தரம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர்கள் | 72 | 57 | 15 |
| எழுதுவினைஞர் மற்றும் ஏனைய தரங்கள் | 137 | 113 | 24 |
| சிற்றூழியர் தரங்கள் | 74 | 68 | 06 |
| மொத்தம் | 283 | 238 | 45 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9.2 (பீ) பிரிவிற்கிணங்க சபையில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அட்டவணை மற்றும் பதவியணி என்பன பெறக் கூடியதாக இருக்கவில்லை. எனினும் சபையின் பதவியணி நிலைமை அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட 250 ஊழியர்களையும் வேலையற்ற பட்டதாரிகள் திட்டத்தின் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட 33 ஊழியர்களையும் கொண்டிருந்தது.

(ஆ) சுற்று நிருபத்தின் 9.3.1 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு சபையால் முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்ச்சித் திட்டம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக உள்ள பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி உட்பட ஆளணியிலுள்ள 45 வெற்றிடங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையில் கூட நிரப்பபட்டிருக்கவில்லை.

(ஈ) ஆளணியினருக்கான ஆட்சேர்ப்பு மற்றும் ஊழியர் கோப்பின் திருத்தம் என்பவற்றுக்கான ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்காக 2007 இல் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு ரூபா 680,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்திற்கிணங்க புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்ச்சித்திட்டம் மற்றும் ஊழியர் கோப்பின் மறுசீரமைப்பு என்பவற்றை நடைமுறைப்படுத்தல் இது வரையில் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை

(உ) உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை தாக்கமான முறையில் மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டில் சபையால் போதிய உள்ளகக் கணக்காய்வுப் பதவியணி நியமிக்கப்பட இணைக்கப்பட்டிருக்கவில்லை. என்று அவதானிக்கப்பட்டது.

## 2.5 பதவியினர் வீடமைப்புக் கடன் திட்டம்

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் (எஸ்எம்ஐபீ) உதவியுடன் சபையால் அமுலாக்கப்பட்ட பதவியினர் வீடமைப்புக் கடன் திட்டத்தின் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியினர் வீடமைப்புக் கடன் திட்டத்தை அமுலாக்குவதற்கான திறைசேரி அனுமதி 2011 மே 31 வரையில் பெறப்பட்டிருக்கவில்லை. சபையால் ஊழியர்களின் சார்பில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சில வீடமைப்புக் கடன்களிற்காக உயர் வட்டி வீதம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரச ஈட்டு முதலீட்டு வங்கியிடமிருந்து கிடைத்த உறுதிப்படுத்தலின் படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டின் மீதி ரூபா 16,142,969 ஆக இருந்த அதே வேளை ஐந்தொகையின் படி, அது ரூபா 13,377,908 ஆக இருந்தது. ரூபா 2,824,557 ஆன இந்த வித்தியாசம், வங்கி உறுதிப்படுத்தலின் படி, கிடைத்திருந்த போதிலும் கிடைக்க வேண்டிய வட்டியாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(இ) கடன்களை வழங்குவதற்காக சபையின் நிதிகள் பயன்படுத்தப்பட்ட போதிலும் கடன் பதிவேடு உட்பட பழைய கடன்கள் தொடர்பாக போதிய பதிவேடுகள் சபையால் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மொத்த முதலீடுகள் கடன்களை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படாத மற்றும்

கடன்கள் முறையாக அறவிடப்பட்டிருந்தனவா என்பவற்றைப் பற்றி கணக்காய்வில் திருப்தியடையமுடியவில்லை.

(ஈ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 9,592,293 தொகையான மொத்தக் கடன் மீதி மற்றும் ரூபா 6,550,549 தொகையான வைப்பு மீதி என்பன குறைந்த வட்டி வீதத்தில் வங்கியில் அநாவசியமாக வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் குடியிருப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டிடம் 2002 திசெம்பர் 31 இல் வெறுமையாக்கப்பட்டதுடன் வளவின் சொந்தக்காரரிடம் வைக்கப்பட்டிருந்த ரூபா 2,400,000 ஆன வாடகை வைப்பு மீளாய்வாண்டின் இறுதிவரையிற்கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த நோக்கத்திற்காக ஒரு மத்தியஸ்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக 2005 இலிருந்து 2011 மே 30 வரை ரூபா 2,134,514 ஆன தொகை செலவிடபட்டிருந்ததென்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. 4 ஆண்டுகள் கடந்த பின்னர் 2009 இல் மத்தியஸ்த விசாரணை பூரணமாக்கப்பட்டிருந்த போதிலும், தீர்மானத்தின் படி, கட்டிடத்திற்கான சேதங்கள் மற்றும் திருத்தங்கள் நீங்கலாக ரூபா 1,816,214 ஆன தொகை சபைக்கு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் வளவின் சொந்தக்காரர் மத்தியஸ்தர்களின் தீர்ப்பிற் கெதிராக ஒரு வழக்கை மேல் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக 2008 ஒக்தோபரில் புதிய மத்தியஸ்தர் நியமிக்கப்பட்டிருந்தார். விடயம் இன்னமும் நிலுவையிலுள்ளது.

(ஆ) இலங்கை தேயிலைச் சபையின் ஒவ்வொரு பிரிவிற்கும் தேவைப்பட்ட பணிகளுக்கு ஆதாரமான விசேட பிரயோக மென்பொருள் மற்றும் தொடர்புபட்ட வன்பொருள் என்பவற்றை வழங்கி, நிறுவுவதற்காக 2009 திசெம்பர் 31 வரை ஒரு தனியார் நிறுவனத்திற்கு சபையால் ரூபா 9,038,930 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2005 ஏப்ரல் 07 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், இந்த வலையமைப்பு முறையின் விநியோகம் மற்றும் நிறுவுகை 90 நாட்களிற்கிடையில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டிருந்த போதிலும், பூர்த்தியாக்கற் காலம் இரு தரப்பினரிலுமுள்ள குறைபாடுகள் காரணமாக 2008 ஏப்ரல் 01 வரை பரஸ்பரம் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த நடவடிக்கை 2010 திசெம்பர் 31 வரை கூட பூர்த்தி செய்யப்படாது நடை பெறும் வேலையாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமை கணக்காய்வில்

அவதானிக்கப்பட்டது. மேலும் உடன்படிக்கையின் பின்னிணைப்பு 3 இன் 5 ஆம் பிரிவின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்து கனடா மற்றும் பாங்கொக் தூதுவராலயங்களின் நடைமுறைக் கணக்குகளில் ரூபா 317,231 ஆன மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தன.

**2.7 முதலீடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 60,358,186 தொகையான பணிக்கொடை ஏற்பாடு மற்றும் தேயிலைக் கொழுந்து வியாபாரிகளின் வைப்புக்கள் என்பவற்றின் முதலீட்டில் ரூபா 24,143,274 ஆன தொகை (முதலீட்டின் 40%) 2010 செப்தெம்பர் 28ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் மிகை நிதியாக 2010 ஆம் ஆண்டில் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும், அந்த முதலீடுகள் மிகை நிதிகளல்ல என்று அவதானிக்கப்பட்டதுடன் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களால் கோரப்படும் போது பணிக்கொடைத் தேவைப்பாடுகளுக்குமாக சபைக்கு தேவைப்படும் போது பெறக் கூடியதாக இருக்க வேண்டும். திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்ட நிதிகள் நிதிக் கூற்றுக்களில் முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலண்டன், இலங்கை வங்கியின் ஆறு மாத நிலையான வைப்பிலிருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 902,719 தொகையான வட்டி கிடைத்திருந்த போதிலும், ஸ்ரேலிங் பவுண்களின் நாணய பரிமாற்று வீதங்கள் குறைந்து சென்றதன் காரணமாக மீளாய்வாண்டில் இலாபத்திற்கெதிராக ரூபா 3,896,073 ஆன நட்டம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**2.8 தேயிலை மேம்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்திற்கான வரி**

2010 ஒக்தோபர் 27 ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, தேயிலை மேம்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்திற்கான வரியின் சேகரிப்பாக ஒவ்வொரு தேயிலை ஏற்றுமதியிலும் தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து (ஒவ்வொரு கிலோ கிராமிற்கு ரூபா 3.50) சபையால் 2010 நொவம்பர் 01 இலிருந்து 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 194,275,470 ஆன மொத்த தொகை சேகரிக்கப்பட்டது. இலங்கைக்கிடையிலும் வெளியிலும் தேயிலை மேம்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதே இந்த சேகரிப்பின் நோக்கமாகும். எனினும், 2011 யூன் 30 வரை மொத்த சேகரிப்பு ரூபா 524,958,409 ஆக இருந்த போதிலும், எதுவித நடவடிக்கைகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் படி, சபையின் மூலதன நிதியத்தின் ஒரு பகுதியாக சேகரிக்கப்பட்ட

தொகை கருதப்பட வேண்டும், எனினும் நிதிக் கூற்றுக்களின் படி, இந்த வரி தேயிலை மேம்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாய வரியின் வைப்பாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உண்மையானவற்றிற்குமிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் அது பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்க என்பதைக் காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கணக்கீடு

(இ) கிடைக்க வேண்டியவைகள் மற்றும் செலுத்தப்பட வேண்டியவைகள்

(ஈ) உதவிப்பண கொடுப்பனவுகள்

(உ) பதவியினர் கடன்கள்